பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 26 சனிக்கிழமை 12.10.2024 கதிர் 339

### இனி இது ரகசியம் அல்ல!

ஒரு வழியாக வேட்புமனு தாக்கல் முடிந்தாயிற்று. தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரையில் ''அப்பாடா'' என்று இருக்கும். ஏனெனில் வேட்பாளர்களைத் தேடிப் பிடிப்பதே சில கட்சிகளுக்குப் பெரும் வேலையாகப் போய்விட்டது. ☞2

கட்சிகள், சுயேச்சைக் என

# நாடாளுமன்ற தேர்தலில் 690 தரப்புகள் களத்தில்

அம்பாறை 64, மட்டக்களப்பு 49, வன்னி 47, யாழ்ப்பாணம் 44, திருகோணமலை 31



2024 பொதுத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் என 690 தரப்புகள் போட்டியிடப் போவதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்த வேட்பு மனுக்களை ஏற்கும் செயற்பாட்டை அடுத்து ஒன்றரை மணிநேரம் ஆட்சேபனைகளுக்கு வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

நவம்பர் 14 இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய ஒக்டோபர் 4 முதல் ஒக்டோபர் 11 வரை அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக, பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு இம்முறை 764 வேட்புமனுக்கள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்களிடமிருந்து பெறப்பட்டிருந்தன. இதில் 74 ☞2

## கன மழை எச்சரிக்கை

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 150 மில்லிமீற்றருக்கும் அதிக பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாட்டை அண்மித்துள்ள வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் காரணமாக மழையுடனான வானிலை நீடிப்பதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனால் மேல், சப்ரகமுவ, ☞8

## மீனவர்களுக்கு அறிவுறுத்தல்

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பிராந்தியங்களுக்கு மறு அறிவித்தல் வரை பயணிக்க வேண்டாம் என மீனவர்கள் மற்றும் கடல்சார் ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பலத்த காற்று, கடல் கொந்தளிப்பு காரணமாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கையை விடுத்துள்ளது. குறித்த கடற்பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 60 முதல் 70 ☞8

## நச்சுப் பொருள் கலந்த ரின் மீன்கள் சிக்கின

இரண்டு இலட்சத்து 15 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆசனிக் இரசாயன விஷம் கலந்த ரின்மீன் தொகை ஒருகொடவத்தை சுங்கக் களஞ்சியத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விஜயம் சுற்றாடல், வனஜீவராசிகள், வனவளங்கள், நீரியல் வளம், பெருந்தோட்டமற்றும் உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் பீ.ஆர்.பிரபாத் சந்திரகீர்த்தி தலைமையில் இடம்பெற்ற கண்காணிப்புச் சோதனையில் இவை சிக்கின.

இந்த விச ரின் மீன் தொகையை இங்கு அழிக்காமல், அவற்றை மீண்டும் மீள் ஏற்றுமதி செய்ய ☞8

வேட்பாளர் பட்டியலில் பெயர் நீக்கம்;

## நம்ப வைத்து ஏமாற்றியதற்கு எதிராக நீதிமன்றம் செல்வேன்

நடிகை தமிதா ஆசேவம்

இரத்தினபுரி வேட்புமனு பட்டியலில் இருந்து தனது பெயர் நீக்கப்பட்டதன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக நடிகை தமிதா அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்ட செயலகத்திற்கு அருகில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், ☞8

புலமைப் பரிசில் பரீட்சை சிக்கல்:

## விசாரணை அறிக்கை பிரதமரிடம் சமர்ப்பிப்பு

தரம் ஐந்து, புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் மதிப்பீட்டைத் தற்காலிகமாக நிறுத்தி, முறையான விசாரணையை நடத்துமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அண்மையில் உத்தரவிட்டார்.

புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்துமாறு பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டால், ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார். ☞8

## ஓய்வூதிய இடைக்கால கொடுப்பனவை அடுத்த வாரமே வழங்க அநுர உத்தரவு

அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் மாதாந்த இடைக்கால கொடுப்பனவாக 3000 ரூபாவை அடுத்த வாரம் முதல் வழங்குமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இடைக்கால கொடுப்பனவான 3000 ரூபாய் ஒக்டோபர் மாத ஓய்வூதியத்துடன் சேர்க்கப்படாமை தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி, அதே தொகையை அடுத்த வாரத்திற்குள் ஓய்வூதியதாரர்களின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை ☞8

## பெரும்பான்மையை கைப்பற்றி ஐ. ம. சக்தி ஆட்சியைப் பிடிக்கும்

எரான் விக்கிரமரத்ன தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டால் அந்தக் கட்சியே நாடாளுமன்றத் தேர்தலிலும் வெல்லும் என்ற கருத்தை மாற்றி ஐக்கிய மக்கள் சக்தி இந்தத் தேர்தலில் பெரும்பான்மையைக் கைப்பற்றி நாடாளுமன்றத்தில் ஆட்சியைப் பிடிப்போம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் ☞8

## அதிகளவு பெண் எம்.பிக்களைப் பெற்று நாடாளுமன்றில் சாதனை படைப்போம்

பிரதமர் ஹரினி எதிர்வுகூறல்

பொதுத் தேர்தலில் 113 இற்கும் அதிகமான ஆசனங்களைப்பெறுவதுடன் அதிகளவிலான பெண்கள் பிரதிநிதித்துவத்தை பெற்று இம்முறை நாடாளுமன்றத்தில் வரலாற்று சாதனைப் படைப்போம் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்திக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்த பின்னர் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தாவது:

ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொண்ட வெற்றியை பொதுத்தேர்தலில் மீண்டும் உறுதிப்படுத்துவோம். ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் வேலைத்திட்டங்களை பலமாக கொண்டு செல்வதற்கான பிரதிநிதித்துவத்தை நாடாளுமன்றத்தில் பெற்றுக்கொள்வோம்.

மக்களுக்கு இதுவரையில் நாங்கள் பொய் ☞8

## கடந்தகாலத்தில் இருந்தவற்றைவிட ஜே.வி.பி. ஆட்சியே மோசமானது

மக்கள் முன்னணியின் பேச்சாளர் தெரிவிப்பு

ஜே.வி.பி ஆட்சி கடந்த காலத்தில் இருந்தவற்றைவிட மிகவும் மோசமானது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஸ் தெரிவித்துள்ளார்.

அராலியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களுடன் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜே.வி.பியினர், தேசிய மக்கள் சக்தியினர், அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தமிழ் மக்களுக்கு சார்பாக ஐ.நாவில் ☞8

## இனி இது .....

இதற்கிடையில் ஒரு கட்சி அல்லது சுயேச்சைக் குழுக்கள் தமக்கான வேட்பாளர்களாகத் தெரிவு செய்து வைத்திருந்தவர்களை 'மைக்' கட்சி வந்து காசைக் கொடுத்துக் கொத்திக்கொண்டு போனகதைகளும் நடந்துள்ளன. தமிழ் அரசுக் கட்சி போன்ற சில கட்சிகளுக்கு வேட்பாளர்களைத் தெரிவு செய்யச் செய்ய புலம்பெயர்ந்தவர்களினதும் ஆயர் இல்லத்தினதும் தலையீடுகளால் அவர்கள் ஆளைவிட்டால் போதும் என்று தெறித்து ஓடிய சம்பவங்களும் நடந்தன. இதனால் திக்கித் திணறிய கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் ஒருவழியாக வேட்பு மனுக்களைப் பூர்த்தி செய்து ஒப்பேற்றிவிட்டார்கள்.

எல்லா இடங்களிலும் சுயேச்சைகள் அள்ளிக் கொட்டப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்றத் தேர்தலில் கட்டுப்பணம் சொற்பம்தான். உதாரணத்திற்கு யாழ்ப்பாணத்தில் வேட்பாளர் ஒருவருக்கு 2 ஆயிரம் ரூப்பாய்தான் முடியும். இந்தத் தொகையைத் தீர்மானத்த காலத்தில் இந்தத் தொகைக்கு பெரும் மதிப்பு இருந்திருக்கும். ஆனால் இன்று 2 ஆயிரம் ரூபாய் ஒரு நாள் செலவுக்குக்கூட காணாது என்கிற நிலையில் அதைக் கட்டி வேட்பாளர் ஆகுவதை யாரும் பொருட்படுத்தவேயில்லை. இப்படித்தான் ஜனாதிபதித் தேர்தலிலும் 40 பேர் கட்டுப்பணம் செலுத்தினார்கள். 39 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்தார்கள். ஒருவர் இறந்துபோக 38 பேர் போட்டியிட்டார்கள். ஆனால் அவர்களில் 30 பேரைத் தேர்தல் மேடைகளில் காணக்கிடைக்கவில்லை. 20 பேருக்கும் மேற்பட்டவர்கள் ஒரு தடவைகூட பரப்புரைகூடச் செய்யவில்லை. இப்படி நாடாளுமன்றத் தேர்தலில் என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ தெரியாது.

தமிழ் அரசுக் கட்சியில் வேட்பாளர் வாய்ப்பு நிராகரிக்கப்பட்டதால் பொங்கியெழுந்தவர்கள் ஐங்கரநேசனோடு சேர்ந்து அமைத்த ஜனநாயகத் தமிழ் அரசுக் கூட்டமைப்புக்காரர்களின் சுயேச்சைக் குழுவுக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒரு தேர்தலில் ஐங்கரநேசனுக்கு ஒதுக்கப்பட்ட சின்ன அது. சின்னம் ஒதுக்கப்பட்டதும் இரண்டு 'டொம்யேசி' மாம்பழத்துடன் சென்று மாவையரைப் பார்த்திருக்கிறார்கள் இந்தக் குழுவினர். மாவையரின் மகனும் இந்தக் குழுவோடுதான் இருக்கிறார். போதாததற்கு தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் சிறீதரனும் மாவையரைச் சந்தித்து ஆசி பெற்றிருந்தார்.

இருந்தாலும் சிறீதரன் மாவையரின் காலில் இரண்டு தரம் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார். ஆனால் மாம்பழக் கூட்டணியினர் அப்படிச் செய்யவில்லை. மாவையரின் மகன்கூட அப்படிக் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கவில்லை. இதனால் மாவையரின் மனதைத் தொட்டவர்கள் யார் என்பதை இப்போது உறுதியாகச் சொல்ல முடியாது. ஒருவேளை தேர்தலில் தன்னுடைய கட்சியான வீட்டுக்கும் ஒரு புள்ளடி, ஆசீ வாங்கிய மகனின் கூட்டணிக்கும் ஒரு புள்ளடி, போனால் போகிறது போனமுறை சங்குக்கும் போட்டனான் தானே என்று நினைத்து இந்தமுறையும் சங்குக்கும் ஒரு புள்ளடி என்று குத்துகிறாரோ தெரியாது. நடிகர் வடிவேலுவின் நகைச்சுவை போல அப்படிக் குத்தின பிறகு அந்த வாக்குசீட்டை எடுத்துக்கொண்டுவந்து "இந்தாப் பாரு! குத்தியிருக்கனா, குத்தியிருக்கனா, குத்தியிருக்கனா, நீங்களும்தான் எத்தனை தரம் கேக்குறீங்கள் நாங்க என்ன ஞாபகம் இல்லாமலா இருக்கிறம்" என்று காட்டினார் என்றால் இன்னும் சிறப்பாக இருக்கும். மக்களும் அவர் உண்மையில் மூன்று பேருக்கும் வாக்களித்திருக்கிறார் என்று நம்புவார்கள் (மூன்று குத்துக் குத்திய பின்னர் அந்த வாக்கை பெட்டிக்குள் போட்டால் என்ன வெளியே கொண்டுவந்து காட்டினால்தான் என்ன! எல்லாம் ஒன்றுதான்!).

மட்டக்களப்பில் இந்தத் தடவை தமிழ் அரசுக் கட்சிக்கான ஒரு சவால் குறைந்து விட்டது. தமிழ் அரசுக்கட்சியிலிருந்து ராஜபக்சக்களின் பக்கம் தாவிப் பின்னர், ரணில் வந்ததும் அவருடன் தொங்கி, அங்கு தனி அரசியல் செய்துவந்தவரான வியாழேந்திரன் போட்டிக் களத்திலிருந்து அகற்றப்பட்டுவிட்டார். அவரது ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன. அதனால் போட்டிக் களத்திலிருந்து அகற்றப்பட்டுவிட்டார். 2020 நாடாளுமன்றத் தேர்தலில் அவர் ஒரு ஆசனத்தைப் பெற்றிருந்தார். அதை வைத்து இராஜாங்க அமைச்சர் பதவியையும் பெற்றிருந்தார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாடாளுமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன

அதேநேரம், நாடாளவிய ரீதியில் பார்க்கும்போது திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான அரசியல் குழுக்கள் போட்டியிடுகின்றன. கட்சிகள், சுயேச்சைகள் என 64 தரப்புக்கள் அங்கு போட்டியிடுகின்றன.

மொனராகலை மற்றும் பொலன்னறுவை தேர்தல் மாவட்டங்களிலேயே குறைந்த எண்ணிக்கையிலான அணிகள் போட்டியிடுகின்றன, அங்கு தலா 15 அணிகள் போட்டியிடுகின்றன.

வேட்புமனு ஏற்பில் அநீதிகள் இடம்பெற்றுள்ளதாக உணர்ந்தால் அந்த குழுக்கள் நீதிமன்றத்திற்கு செல்ல முடியும். அதற்கு ஆணைக்குழு எந்த வகையிலும் தடையாக இருக்காது.

வேட்புமனு ஏற்புப் பணிகள் முடிந்துள்ளதை அடுத்து விருப்பு வாக்கு இலக்கங்கள் வழங்கப்படும் செயற்பாடுகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் அடுத்த இரு நாட்களுக்குள் நிறைவுறும்.

அதேநேரம், தேர்தல் விதிமுறைகளுக்கு அமைவாக கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தமது பிரசாரப் பணிகளை முன்னெடுக்க முடியும் என்றார்.

இதேவேளை, மாவட்ட ரீதியாக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பான விவரங்கள் வருமாறு,

### யாழ். தேர்தல் மாவட்டம்

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 46 வேட்புமனுகள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களால் கையளிக்கபட்ட நிலையில் 2 சுயேட்சை குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்று யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அத்தியட்சகர் பிரதீபன் தெரிவித்தார்.

இதன்படி இம்முறை நாடாளுமன்ற தேர்தலில் 23 கட்சிகளும் 21 சுயேச்சைக் குழுக்களுமாக 44 அரசியல் தரப்புக்ள யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் களமிறங்கவுள்ளன என்றார்.

### வன்னித் தேர்தல் மாவட்டம்

வன்னி மாவட்டத்தில் 47 கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், 4 குழுக்களின் விண்ணப்பங்கள் நிராகரிகரிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபரும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான சரத்சந்திர தெரிவித்தார்.

இம்முறை வன்னி தேர்தல் மாவட்டத்தில் 24 அரசியல் கட்சிகளும் 27 சுயேட்சைக் குழுக்கள் என்று மொத்தமாக 51 குழுக்கள் வேட்பு மனுக்களை கையளித்திருந்தது.

அவற்றில் 2 அரசியல் கட்சிகள் மற்றும் 2 சுயேச்சை குழுக்களினது விண்ணப்பங்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத காரணத்தினால் தேர்தல் அலுவலகத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக எங்கள் மக்கள் சக்தி மற்றும் சிறிரெலோ கட்சி போட்டியிடவிருந்த ஜனநாயக தேசிய கூட்டணி ஆகிய கட்சிகளின் வேட்பு மனுக்களே நிராகரிக்கப்பட்டுள்ளன. 47 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

2024 ஆம் ஆண்டிற்கான பொதுத்தேர்தலில் 6 நாடாளுமன்ற ஆசனங்களை பெற்றுக்கொள்வதற்காக வன்னி தேர்தல் மாவட்டத்தில் 423 வேட்பாளர்கள் களத்தில் இறங்கியுள்ளனர் என்றார்.

### மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை தேர்தலில் 392 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாக மட்டு. மாவட்டச் செயலரும் தெரிவத்தாட்சி அலுவலருமான திருமதி ஜே.ஜே. முரளிதரன் தெரிவித்தார்.

அத்துடன் இத்தேர்தலில் போட்டியிடுவதற்கு அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் உட்பட 56 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதில் ஒரு கட்சி 6 சுயேச்சை குழுக்கள் உட்பட 7 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், 22 கட்சிகள் 27 சுயேச்சைக்குழுக்கள் உட்பட 49 வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 449,686 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதுடன் 442 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

இதேவேளை கடந்த 2020 ஆம் ஆண்டு தேர்தலில் மாவட்டத்தில் 5 பிரதிநிதிகளை தேரந்தெடுப்பதற்கு 16 கட்சிகளும் 22 சுயேச்சைக்குளுக்ளைச் சேர்ந்த 304 வேட்பாளர்கள் போட்டியிட்டுகின்றனர் என்றார்.

### திருகோணமலை தேர்தல் மாவட்டம்

திருகோணமலை மாவட்டத்தில் 20 அரசியல் கட்சிகள், 17 சுயேச்சை குழுக்கள் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தன. என்று திருகோணமலை மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஆர்.சசீலன் தெரிவித்தார்.

அவற்றில் 17 அரசியல் கட்சிகளும் 14 சுயேச்சைக் குழுக்களும் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன மூன்று கட்சிகளும் மூன்று சுயேச்சை குழுக்களும் நிராகரிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய ஜனநாயக முன்னணி, அகில இலங்கை தமிழர் மகா சபை, ஐக்கிய தேசிய சுதந்திர கூட்டமைப்பு உட்பட மூன்று சுயேச்சை குழுக்களுமே இவ்வாறு நிராகரிக்கப்பட்டன.

சத்தியக் கடதாசி சமர்ப்பிக்காமை, சரியான முறையில் விண்ணப்பத்தை கையளிக்காமை உள்ளிட்ட காரணங்களால் இந்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்றார்.

### திகாமடுல்ல (அம்பாறை) தேர்தல் மாவட்டம்

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 64 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்றன. அத்துடன், இம்மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையான அரசியல் கட்சிகளும் சுயேச்சைகைகளும் களமிறங்கியுள்ளன.

### நுவரெலியா தேர்தல் மாவட்டம்

நுவரெலியா மாவட்டத்தில் 8 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 17 அரசியல் கட்சிகளிலும் 11 சுயேச்சை குழுக்களிலும் 308 பேர் போட்டியிடுகின்றனர். அங்கீகரிக்கப்பட்ட 3 அரசியல் கட்சியும் 4 சுயேச்சை குழுக்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இதன்படி ஈரோஸ் ஜனநாயக முன்னணி, அருணலு மக்கள் கட்சி, தேசிய மக்கள் கட்சி ஆகிய 3 கட்சிகளின் வேட்பு மனுக்களே நிராகரிக்கப்பட்டன. 17 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பிலும் 11 சயேச்சை குழுக்கள் சார்பிலும் 308 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

மாவட்டத்தில் 605,292 வாக்காளர்கள் 534 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

### புத்தளம் தேர்தல் மாவட்டம்

புத்தளம் மாவட்டத்தில் இருந்து 8 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 429 பேர் போட்டியிடுகின்றனர் என்று புத்தள

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# முக்கிய கட்சிகளின் தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் விவரமும் அறிவிப்பு

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள பிரதான அரசியல் கட்சிகளின் தேசியப் பட்டியல் வேட்பாளர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் தேசிய பட்டியல் அறிவிக் கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன யாப்பா ஆகியோரின் பெயர்களும் இப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தினேஷ் குணவர்தன, ஷியாமலா பெரேரா, மொஹமட் பைசர் முஸ்தபா, டிரான் அலஸ், மஹிந்த யாப்பா அபேவர்தன, ஜயந்த வீரசிங்க, செந்தில் தொண்டமான், சுரேந்திர ராகவன், ரொனால்ட் சித்ரஞ்சன் பெரேரா, ரவி கருணாநாயக்க, தலதா அத்துகோரள, கனிஷ்க சுரனிமல் ராஜபக்ச, மொஹமட் முஸ்தபா அன்வர், நிசங்க நாணயக்கார, சாகல அபேவிக்ரம, சிறிபால அமரசிங்க, வீரகுமார திஸாநாயக்க, ரஷ்தான் ரஹ்மான், நிமல்கா பெர்னாண்டோ, தமயந்தி ஜெயசேகர, நியூட்டன் பீரிஸ், லெஸ்லி தேவேந்திர, மஹிந்த சேனரத் பண்டார, ஆதம்பாவ லெப்பை, மொஹமட் முஸம்மில், வெல்லாலகே பந்துல, சிறிமசிறி ஹப்புஆராச்சி, பியுமி செனரத் சமரதுங்க, கீர்த்தி ஸ்ரீ வீரசிங்க ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பொதுத் தேர்தலுக்காக பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில், நாமல் ராஜபக்ச, காமினி லொகுகே, சி.பி. ரத்நாயக்க, வண.உத்துராவலதம்மரதன தேரர், திஸ்ஸ விதாரண, ஜயந்த கெட்டகொட, சாகர காரியவசம், திசக்குட்டி ஆராச்சி, வண. தெபுவான பியானந்த தேரோ தெபுவான, முஹம்மது ஃபதில் மர்ஜான் அஸ்மி, ரேணுகா பெரேரா, விமல் கீகங்கே, டபிள்யூ.தயாரத்ன, அனுஷா தமயந்தி, ஜகத் வெள்ளவத்தை, வசந்த ஹந்தபாங்கொட, விராஜ் பெரேரா, அதுல பிரியதர்ஷன டி சில்வா, மஞ்சுள வெல்லலகே, ரவிஹார குலதுங்க, தமித் ஹெட்டிஹேவா, ரஞ்சித் பண்டார, விதுர பெரேரா, பசன் கஸ்தூரி பெர்னாண்டோ, சரத் கீர்த்திரத்ன, சுதத் ரோஹண, மஹிந்த பத்திரன, ரத்ன தர்மப்ரியா தயா பத்திரன, சமந்தா இந்திக ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் வேட்பாளர்களாக, பிமல் ரத்நாயக்க, பேராசிரியர் வசந்த சுபசிங்க, கலாநிதி அனுர கருணாதிலக்க, பேராசிரியர் உபாலி பனிலகே, எரங்க உதேஷ் வீரரத்ன, அருணா ஜெயசேகர, கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனித ருவன் கொடிதுக்கு, புண்ய ஸ்ரீ குமார ஜெயக்கொடி, ராமலிங்கம் சந்திரசேகர், கலாநிதி நஜித் இந்திக்க, சுகத் திலகரத்ன, வழக்கறிஞர் லக்மாலி ஹேமசந்திர, சுனில் குமார் கமகே, காமினி ரத்நாயக்க, பேராசிரியர் ருவன் சமிந்த ரணசிங்க, சுகத் வசந்த டி சில்வா, கீர்த்தி வெலிசரகே, சமிலா குமுது பிரிஸ், அப்துல் ஃபதா முகமது இக்ராம், ரஞ்சன் ஜெயலால் பெரேரா, மொஹமட் முகமது நசீர் இக்ராம், க்ளோமெட் மார்ட்டின் நெல்சன், ரொமேஷ் மோகன் டி மெல், பெனிடா பிரிஷாந்தி ஹெட்டிதந்த்ர, புபுது நுவன் சமரவீர, சரத் லால் பெரேரா, அனுர ஹெட்டிகொட கமகே, ஹேமதிலக கமகே ஆகியோரின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. பல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

அதனடிப்படையில், ரஞ்சித் மத்தும பண்டார, இம்தியாஸ் பகீர் மார்க்கர், டலஸ் அழகப்பெரும, சாகரன் விஜயேந்திரன், நிசாம் காரியப்பர், சுஜீவ சேனசிங்க, ஜி.எல். பீரிஸ், சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, உபுல் ஜயசூரிய, மஹீம் மெண்டிஸ், உபுல் பண்டார திஸாநாயக்க, ரோஹன லக்ஷ்மன் பியதாச, லிஹினி பெர்னாண்டோ, ரவீந்திர சமரவீர, அதுலசிறி சமரகோன், கெனடி குணவர்தன, லலித் பிரசன்ன பெரேரா, விசாகா சூரியபண்டார, மகேஷ் சேனாநாயக்க, ரவி ஜயவர்தன, டி.டி.பி. விஜேகுணவர்தன, எல். மித்ரபாலா, பழனிவேலு பரமேஸ்வரன், பாலகிஷ்ணன் சிவநேசன், ஜி. நகுலேஸ்வரன், சந்திம விஜேகுணவர்தன, எம்.எச்.எம்.ரூமி, எம்.ஐ.எம். முஹம்மது, இந்திக்க பண்டாரநாயக்க ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

சர்வஜன அதிகாரத்தின் தேசிய பட்டியலில் பல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல தொழில் வல்லுநர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் அறிஞர்களைக் கொண்டுள்ளது.

அதன்படி, ஹேமகுமார நாணயக்கார, கிகனகே வீரசிங்க, ரஞ்சன் குமார் செனவிரத்ன, காமினி வலேபொட, ரொஹான் ஹர்ஷ பெர்னாண்டோ, நாலக பெரேரா, கணபதி பிள்ளை, ரொஷான் மஹேஸ் ஜேம்ஸ் குணதிலக்க, புஞ்சி நிலமே மீகஸ்வத்த, சமீர பிரசங்க சோமரத்ன, டியூடர் வீரசிங்க, நந்தசிறி வீரசிங்க, ஜகத் கொடிதுவக்கு, வருண சந்திரகீர்த்தி ஹெட்டியாராச்சி, ருவன் பண்டார ருக்மன் திலகரத்ன, தனுஜா தம்மிக்க ரத்மலே, ரணுக சம்பத் மாரசிங்க, ஷெஹான் அம்பேபிட்டிய, சூரிய பண்டார திஸாநாயக்க, மொஹமட் ஹசன், திலின பீரிஸ், பூபதி யாயஸ் ஸ்ரீ பண்டார, நிலேந்திர தேசப்பிரிய, பிரியந்த பிரதீப் குமார் மாபலகம, தனிந்து கௌசிக் விதானவசம், பிரசன்ன விஜிதரஞ்சன அமரதுங்க, ஜனேந்திர சம்பத் ரணசிங்க, புத்திக ஏகநாயக்க, ருவானி தமயந்தி திசேரா ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சாதகமான வளர்ச்சி பதிவாகி வருகிறது; ஆனால், சவால்களும் தொடர்கின்றன

## உலக வங்கியின் இலங்கை குறித்த பொருளாதார நிபுணர் ஸ்ருதி லக்டகியா




இலங்கையில் பொதுவாக நோக்குமிடத்து சாதகமான வளர்ச்சி நிலைதெரிகிறது. வங்கியின்வெளிநாட்டு கையிருப்பு அதிகரித்துள்ளது. ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வலுவடைந்துள்ளது. பணவீக்கம் குறைந்திருக்கிறது. வட்டிவிகிதங்களும் அதிகரிக்கப்படவில்லை. தனியார் கடன்கள் அதிகரித்திருக்கின்றன. அரச வருமானமும் அதிகரித்திருக்கிறது. ஆனால், மறுபுறம் வறுமை அதிகரிப்பு உள்ளிட்ட சவாலான நிலையும் நீடிக்கிறது என்று உலக வங்கியின் இலங்கை குறித்த பொருளாதார நிபுணர் ஸ்ருதி லக்டகியா தெரிவித்தார்.

இலங்கையின்எதிர்காலவாய்ப்புகள் தொனிப்பொருளில் இலங்கை தொடர்பான புதிய அரையாண்டு அறிக்கை வெளியாகியுள்ளது. இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் உள்ளஉலகவங்கியின்அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் இலங்கையின் பொருளாதார நிலை தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே உலக வங்கியின் இலங்கைக்கான பொருளாதார நிபுணர் ஸ்ருதி லக்டகியா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

நாட்டில் பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதில் பல துறைகள் பங்களிப்பு செலுத்துகின்றன. கட்டட நிர்மாணத்துறையில் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சி அதிகரித்திருக்கிறது. ஆனால் அதற்கு முன்னரான ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இன்னும் வளர்ச்சி தேவைப்படுகிறது. சேவைகள் துறை பங்களிப்பும் அதிகரித்திருக்கிறது. சுற்றுலாத்துறை மற்றும் அந்நிய செலவாணி வருகை என்பன அதிகரித்திருக்கின்றன. இந்த செயற்பாடுகள் காரணமாக நடைமுறை கணக்கு மீதி சாதகமாக பதிவாகி இருக்கின்றது.

அத்துடன் மத்திய வங்கியின் வெளிநாட்டு கையிருப்பு அதிகரித்துள்ளது. ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வலுவடைந்துள்ளது. பணவீக்கம் குறைந்திருக்கிறது. வட்டி விகிதங்களும் அதிகரிக்கப்படவில்லை. தனியார் கடன்கள் அதிகரித்திருக்கின்றன. அரச வருமானமும் அதிகரித்திருக்கிறது. மொத்தமாக பார்க்கும்போது ஒரு முன்னேற்றம் காணப்படுகிறது. இது சாதகமான பக்கமாக இருக்கிறது.

ஆனால் மறுபுறம் வறுமை தொடர்ந்து அதிகரித்த மட்டத்தில் இருக்கிறது. பேரண்ட பொருளாதார வளர்ச்சி வறுமை குறைப்பில் தாக்கம் செலுத்தவில்லை. தொழிற்படை பங்களிப்பும் குறைவடைந்து இருக்கிறது. குடும்ப அலகு பட்ஜெட் அதிகரித்து இருக்கின்றது. சுகாதார மற்றும் கல்வித்துறைக்கான செலவுகள் குறைவடைந்து இருக்கின்றன.

பொருளாதார வளர்ச்சி 4.4 வீதமாக இவ்வருடத்தில் பதிவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுஓர்ஆரோக்கியமானநிலைமையைஎடுத்துக்காட்டுகிறது. ஆனால், வாகன இறக்குமதி அடுத்த வருடம் நடைமுறைப்படுத்தப்படும்போது மேலும் டொலர் வெளிச்செல்கை அதிகரிக்கலாம். (05)

# வடக்கு மீனவர் பிரச்சினைகளுக்குத் தீர்வு அரசுக்கு அழுத்தம் கொடுத்து காண்போம்

## குருசாமி சுரேந்திரன் தெரிவிப்பு



வடக்கில் உள்ள ஒன்றரை இலட்சம் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் தீர்வினை பெற்றுக் கொடுப்போம் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் இணைப்பாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

அராலியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடர்ந்தும் தமிழ் தேசியத்திலே பயணித்துக் கொண் டிருக்கின்ற மக்கள் தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம் தேசியத்தை உறுதிசெய்ய முடியும் என்ற தவறான கருத்தை கடந்த மாதம் தமிழ் மக்களிடையே பரப்பி திரிந்தவர்களை மக்கள் நிராகரித்து, ஒட்டுமொத்தமாக தமிழ் தேசியத்தின் எழுச்சியை நீங்கள் முன்னெடுத்துச் செல்வதற்கு, சங்கு சின்னத்தில் களமிறங்கியுள்ள ஜனநாயகதமிழ்தேசியக்கூட்டணிக்குவாக்களிப்பதன் மூலம் தமிழ் தேசத்தின் திரட்சியையும் இன விடுதலை வேட்கையையும் சமாந்தரமாக எங்களது அபிவிருத்தியையும் உறுதி செய்ய முடியும் என நாங்கள் இங்கே உறுதியாக கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

அதுபோல வடக்கு மாகாணத்தில் பிரதான தொழிலாக கருதப்படுகின்ற, ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட கடல்தொழிலாளர்கள் அனுபவிக்கின்ற பாரிய பிரச்சினைகளை நாங்கள் நிச்சயமாக தீர்த்து வைப்போம்.

குறிப்பாக, 1996ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் பதினாறு தொழில்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன. அந்த தொழில்கள் இலஞ்சம், ஊழல், புறந்தள்ளல், தங்களுடைய சுய விருப்பு வெறுப்புகளுக்காக அந்தத் தொழில்களை அனுமதித்துக்கொண்டு, எமது மீனவர்களது வாழ்வாதாரத்தை நாசமாக்கிக் கொண்டிருக்கின்றதை தடை செய்வதற்கு வழி வகுப்போம்.

அதேபோல 2017ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்தியாவிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வரும் இழுவைமடி படகுகளை தடை செய்கின்ற சட்டத்தையும் இந்த அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து நடைமுறைப்படுத்தவும், எங்களுடைய மீனவர்கள் எதிர்கொள்கின்ற வாழ்வாதாரப் பிரச்சினைகளையும், நீண்டகாலபிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்காக நாங்கள் தொடர்ந்தும் பாடுபடுவோம்.

இதுநமதுதேர்தல்விஞ்ஞாபனத்தின் முக்கியமான ஒரு விடயமாக இருக்கும் என்பதை நாங்கள் உறுதியாக கூறுகின்றோம். - என்றார். (05)

# ஒன்றுடன் ஒன்று மோதி இரண்டு பஸ்கள் விபத்து

## 18 பேர் காயம்

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் உத்துவன்கந்த வலகடயாவ பகுதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான இரண்டு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

பாணந்துறையில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த இ.போ.ச பஸ் ஒன்று கேகாலையில் இருந்து மாவனல்லை நோக்கிப் பயணித்த மற்றுமொரு இ.போ.ச பஸ்ஸின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, 18 பேர் காயமடைந்துள்ள நிலையில் கேகாலை மற்றும் மாவனெல்லை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# இரு பெண்கள் மீது பாலியல் கொடுமை அவர்களின் தந்தைக்கு விளக்கமறியல்

*தனது இரு மகள்களையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தந்தை ஒருவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலன்னறுவை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*பொலன்னறுவை புலஸ்திகம பிரதேசத்தைச் சேர்ந்த தந்தையே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.*

*இவர் ஓய்வு பெற்ற இராணுவ சிப்பாய் ஒருவர் ஆவார்.*

*இது தொடர்பில் தெரியவருவதாவது -*

*சந்தேக நபரான தந்தை தனது 15 மற்றும் 18 வயதுடைய இரு மகள்களையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.*

*இது தொடர்பில் புலஸ்திகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சந்தேக நபரான தந்தை தனது சகோதரியின் 15 வயதுடைய மகளையும் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது.*

*இதனையடுத்து, சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (05)*

# வீதியில் இரு நாள்களாக நிறுத்தப்பட்டிருந்த மோ. சைக்கிளை கைப்பற்றிய பொலிஸார்

## முரசுமோட்டையில் சம்பவம்

கிளிநொச்சி முரசுமோட்டை பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் இரண்டு நாள்களுக்கு மேலாக வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை கிளிநொச்சி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 வீதியின் முரசுமோட்டை பகுதியில் வியாழக்கிழமை பிற்பகல் முதல் வெள்ளிக்கிழமை பகல் வரை இந்த மோட்டார் சைக்கிள் அநாதரவாக விடப்பட்டிருந்தது.

இந்த மோட்டார் சைக்கிள் சந்தேகத்துக்கிடமான முறையிலே நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை பிரதேச மக்கள் அவதானித்து, பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த கிளிநொச்சி பொலிஸார் இந்த மோட்டார் சைக்கிளை கைப்பற்றியுள்ளனர்.

இந்த மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டு கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருக்கலாம் என்கிற சந்தேக கண்ணோட்டத்திலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல் சட்ட திருத்தத்தின் அவசியம்

2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனு ஏற்பு நேற்றுடன் நிறைவுக்கு வந்துவிட்டது. மொத்தமுள்ள 22 தேர்தல்மாவட்டங்களில்(வடக்கில் உள்ள 5 மாவட்டங்களுக்கு 2 தேர்தல் மாவட்டங்களே உள்ளன) அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் என 690 தரப்புகள் போட்டியிடுகின்றன என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்த வேட்பு மனுக்களை ஏற்கும் செயற்பாட்டை அடுத்து ஒன்றரை மணிநேரம் ஆட்சேபனைகளுக்குப் பின்னர் கட்சிகள், சுயேச்சைகள் என 74 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட பின்ன எஞ்சிய தொகையே இ–து.

நவம்பர்14 இடம்பெறவுள்ளநாடாளுமன்றத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய ஒக்டோபர் 4 முதல் ஒக்டோபர் 11 வரை அவகாசம் அளிக்கப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக, பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு இம்முறை 764 வேட்புமனுக்கள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. ஒரு புறத்தில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் எண்ணிக்கைகள் அதிகரித்துக்கொண்டே செல்வதைப் போலவே சுயேச்சைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கிறது. பல மாவட்டங்களிலும், அரசுத் தலைவர் தேர்தலில் வழங்கப்பட்ட வாக்குச் சீட்டைவிட நீளமான வாக்குச்சீட்டை நாடாளுமன்றத் தேர்தலுக்காகத் தயாரிக்கவேண்டியிருக்கும். அந்தளவிற்குப் பட்டியல் நீண்டது. அதுவும் வடக்கு கிழக்கில் போட்டியிடும் அரசியல் தரப்புக்களின் எண்ணிக்கை சாராசரியாக 40இற்கும் அதிகம்.

திகாமடுல்ல (அம்பாறை) தேர்தல் மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான அரசியல் குழுக்கள் போட்டியிடுகின்றன. கட்சிகள், சுயேச்சைகள் என 64 தரப்புக்கள்அங்குபோட்டியிடுகின்றன. மொனராகலைமற்றும் பொலன்னறுவை தேர்தல் மாவட்டங்களிலேயே குறைந்த எண்ணிக்கையிலான அணிகள் போட்டியிடுகின்றன, அங்கு தலா 15 அணிகள் போட்டியிடுகின்றன. வடக்கில் யாழ்ப்பாணத்தில் 44 அரசியல் தரப்புகளும் வன்னியில் 47 அரசியல் தரப்புக்களும், திருகோணமலையில் 31 அரசியல் தரப்புக்களும் மட்டக்களப்பில் 49 அரசியல் தரப்புக்களும் போட்டியிடுகின்றன. இவற்றில் சரி அரைவாசிக்கும் மேற்பட்டவை சுயேச்சைக் குழுக்கள்.

சுயேச்சைகளைப் போட்டியிட அனுமதிப்பது ஜனநாயகப் பண்பியல்பில் சிறந்ததுதான் என்றாலும், சுயேச்சைகளைப் போட்டியிட வைத்து 5 சதவீத வாக்குகளைக்கூட அவை பெறமுடியாத நிலையில் அந்த வாக்குகளை தேர்தல் கணக்கிலிருந்து அகற்றிவிடுவதன் மூலம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்வதற்குத் தேவையான வாக்குகளின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என்கிற ஒரு உத்தியாகவும் சுயேச்சைக் குழுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது மிக மோசமானதொரு நிலை. மக்களின் ஜனநாயக உரிமையைக் கேலிக்கூத்தாக்கும் செயல். இத்தகைய நிலை தடுக்கப்படவேண்டும்.

அதற்குத் தேர்தல் சட்டங்களில் திருத்தங்கள் செய்யப்படவேண்டும். நாடாளுமன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் மிகக் குறைவாக இருப்பதே சுயேச்சைகள் அளவுக்கதிகமாக வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படுவதற்குக் காரணம் என்கிற ஒரு குற்றச்சாட்டும் இருக்கின்றது. அதில் உண்மையும் இல்லாமலில்லை. எனவே இந்த விடயங்களைக் கவனத்தில்கொண்டு, தேர்தலில் தவறான நோக்கங்களுக்காகக் களமிறக்கப்படும் சுயேச்சைகளையும் கட்சிகளையும் தடுக்கும் வகையில் பொருத்தமான சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும்.




## அமெரிக்கா - இஸ்ரேல்: கூட்டுக் களவாணிகள்

ராமச்சந்திர குஹா

இஸ்ரேலிய மக்கள் மீது கடந்த ஆண்டு அக்டோபர் 7இல் கொடூரமான தாக்குதலை நிகழ்த்தியது ஹமாஸ். அதில் 1,100க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர், இறந்தவர்களில் அதிகம் பேர் அப்பாவி மக்கள். இஸ்ரேலிய அரசு உடனே மூர்க்கமாகத் திருப்பித் தாக்கியது, காஸாவில் ஹமாஸின் கட்டுப்பாட்டிலிருந்த பாலஸ்தீனப் பிரதேசத்தின் மீது குண்டுகளை வீசியது.

ஒரு சில நாள்களுக்குப் பிறகு அல்லது ஒரு சில வாரங்களுக்குப் பிறகு தாக்குதலை இஸ்ரேல் நிறுத்திவிடும் என்று சிலர் நினைத்திருக்கவும் நம்பியிருக்கவும்கூடும். ஆனால், இந்தக் காட்டுமிராண்டித்தனமான பதிலடி தாக்குதல் ஓராண்டாக நீடித்து வருகிறது.

இஸ்ரேலியப் படைகளால் இதுவரை 50,000க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர், அவர்களில் 90% அப்பாவி மக்கள். கொல்லப்பட்ட இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனர்களுக்குமான விகிதம் இப்போது ஐம்பதுக்கு ஒன்று (50:1) என்றாகிவிட்டது. இந்த எண்ணிக்கையும் பாலஸ்தீனர்கள் உண்மையில் படும் துயரங்களை அப்படியே முழுமையாக தெரிவித்துவிடவில்லை. பத்து லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் காஸா பகுதியிலிருந்தே விரட்டப்பட்டுவிட்டனர்.

காஸா பகுதியைப் பேரழிவுக்கு உள்ளாக்கிய இஸ்ரேல் இப்போது தனது கவனத்தை லெபனான் மீது திருப்பியிருக்கிறது. இங்கும்கூட அது பயங்கரவாதிகளையும் அப்பாவி மக்களையும் பிரித்துப் பார்த்து தனது தாக்குதலை நடத்தவில்லை. மிகச் சில தனிநபர்களை அழிப்பதற்காக நூற்றுக்கணக்கான லெபனானியர்களைக் கொன்றிருக்கிறது, ஆயிரக்கணக்கானவர்களை வீடிழக்க வைத்திருக்கிறது.

### போர்க் குற்றங்கள்

சர்வதேச குற்றவியல் நீதிமன்றமானது இஸ்ரேலிய அரசும் ஹமாஸ் இயக்கமும் போர்க் குற்றங்களைச் செய்திருப்பதாக அறிவித்திருக்கிறது. வரலாற்று ரீதியிலான பல நிகழ்வுகளுக்காக, ஹமாஸ் இயக்கம் கடந்த ஒக்டோபரில் நிகழ்த்திய கொடூரமான தாக்குதலுக்கு விளக்கம் தரவோ, மன்னித்துவிடவோ முடியாது.

அதேவேளையில் இஸ்ரேலிய அரசின் குற்றமே நிரம்பிய தாக்குதல்கள் அதைவிடப் பல மடங்கு பெரிதானவை. பழிவாங்கும் சாக்கில் அது நிதானமில்லாமல் நடந்துவருகிறது, பள்ளிக்கூடங்களையும் மருத்துவமனைகளையும் குண்டுவீசி தாக்கி தரைமட்டமாக்கிவிட்டது. ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்களைக் கொன்றது மட்டுமல்லாமல் அதைவிட அதிக எண்ணிக்கையில் உள்ளவர்களுக்கு உணவு, குடிநீர், மருந்து -மாத்திரைகள், மின்சாரம் ஆகியவை கிடைக்காமல் கடுமையாக கட்டுப்படுத்திக்கொண்டிருக்கிறது.

இந்த மோதல்கள் குறித்த ஊடகங்களின் செய்திகள் இஸ்ரேலியர்களையும் ஹமாஸ் இயக்கத்தையும் மட்டுமே கவனத்தில் கொள்கின்றன. இந்தக் கட்டுரை, ஏனைய குழுக்களையும் நாடுகளையும் பற்றியது. அவை இந்த மோதல் ஏற்படவும் தொடரவும் உதவிக்கொண்டிருக்கின்றன. பெரும்பாலான குற்றச்செயல்களில் குற்றவாளிகள் மட்டும் ஈடுபடுவதில்லை, அவர்களுக்கு வெளியிலிருந்து உடந்தையாக இருப்பவர்களும் உதவுகிறவர்களும் உண்டு. அப்படியானால் ஹமாஸ் இயக்கத்துக்கு உதவியவர்கள் யார், இஸ்ரேலுக்கு உதவிக்கொண்டிருப்பவர்கள் யார்?

ஹமாஸ் இயக்கத்துக்குப் பெரிதும் உதவுகிறவர்கள் மதம் சார்ந்த அரசாங்கத்தை நடத்தும் ஈரானும், லெபனானில் இருந்துகொண்டு செயல்படும் இன்னொரு பயங்கரவாத அமைப்பான ஹிஸ்புல்லாவும். மேற்கு நாடுகளின் ஊடகங்கள் இவற்றைப் பற்றித் தொடர்ந்து குறிப்பிட்டு குற்றஞ்சாட்டுகின்றன, அவமானப்படுத்துகின்றன. இஸ்ரேலுக்கு உடந்தையாக இருக்கும் நாடுகள் குறித்துப் பேச அவை தவறுகின்றன அல்லது மறைக்கப் பார்க்கின்றன, எனவே அதை நாம் செய்வோம்.

### உதவுவது யார்?

இஸ்ரேலிய அரசின் அனைத்து குற்றச்செயல்களுக்கும் உதவும் முதன்மையான உடந்தை அமெரிக்க நாடு. இஸ்ரேலுக்குத் தேவைப்படும் ராணுவ சாதனங்களையும் ஆயுதங்களையும் அது இடைவிடாமல் அனுப்பிக்கொண்டிருக்கிறது. அதைக் கொண்டுதான் காஸாவையும் இப்போது லெபனானையும் குண்டுவீசி அழிக்கிறது இஸ்ரேலிய ராணுவம். அது மட்டுமின்றி ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளில் இஸ்ரேலைக் கண்டிக்கும் அல்லது மேற்கொண்டு செயல்படவிடாமல் தடுக்கும் தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் தனது ரத்து அதிகாரம் (வீட்டோ) மூலம் தடுத்து, இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர உதவிவருகிறது அமெரிக்கா.

இந்த விவகாரத்தில் தானும் உடந்தை என்பதை ஏற்க மறுக்கும் அமெரிக்காவின் போக்கை கடந்த வாரம் ஹிலாரி கிளிண்டன் அளித்த பேட்டியில் கண்டேன். முன்னாள் அதிபரின் மனைவி, முன்னாள் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் (செனட்டர்), முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர், சில காலம் அதிபர் பதவிக்கான வேட்பாளராக நிறுத்தும் அளவுக்குக்கூட பரிசீலிக்கப்பட்டவர் ஹிலாரி. கொலம்பியா பல்கலைக்கழகத்தில் இப்போது அவர் வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றுகிறார். அந்த அனுபவம் குறித்து அவரைப் பேட்டி கண்டனர்.

கடந்த இலையுதிர் காலத்துக்குப் பிறகு, அவர் பணியாற்றும் கொலம்பியா பல்கலைக்கழகத்தில், ‘காஸா மீது நடத்தும் தாக்குதலை இஸ்ரேல் நிறுத்த வேண்டும், உடனடியாக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட வேண்டும்’ என்று மாணவர்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தினர். இதுகுறித்து கேட்டபோது, இவையெல்லாம் வெளியிலிருந்து பணம் தந்து ஊக்குவிக்கப்படுவதாகப் புறந்தள்ளிய அவர், ‘போராட்டக்காரர்களில் தீவிர யூத எதிர்ப்பாளர்கள் இருக்கின்றனர்’ என்றார்.

### ஹிலாரியின் பேட்டி

ஹிலாரியின் இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரங்கள் தரப்படவில்லை. இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு முன்னால் அழைப்பின்றியே சில வெளியார் அங்கு வந்தது உண்மை. ஆனால், இந்தப் போராட்டங்களில் பங்கேற்றவர்கள் கொலம்பியா பல்கலைக்கழக மாணவர்களும் பேராசிரியர்களும்தான், அவர்களும் சொந்தப் பணத்தைச் செலவிட்டுத்தான் இதில் பங்கேற்றனர்.

காஸாவில் பெண்களும் குழந்தைகளும் கொல்லப்படுவதைக் கண்டு மனம் பொறுக்காத

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# அமெரிக்கா - இஸ்ரேல்: கூட்டுக் களவாணிகள்

4ம் பக்க தொடர்ச்சி...........

பல யூத மாணவர்களும் இந்தப் போராட்டத்தில் தாங்களாகவே வந்து கலந்துகொண்டனர். அவர்களுடைய மூதாதையர்களைப் போல அல்லாமல் - மனிதாபிமானம் பொங்க இச்செயலில் அவர்கள் ஈடுபட்டனர். (இந்த உண்மைகள் அனைவருக்கும் தெரிந்திருந்தும் ஹிலாரியைப் பேட்டி கண்ட ஃபரீத் ஜக்கரியா, அவருடைய குற்றச்சாட்டுகளை மறுக்காமல் அப்படியே விட்டுவிட்டார்).

ஹிலாரியின் இந்தப் பேட்டியைப் பார்த்துக்கொண்டிருந்தபோதே, நியூயார்க் நகரிலிருந்து வெகு தொலைவில் இப்படி ஹமாஸுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டதையும் அதை வெளியிலிருந்து ஒரு முகமை ஆதரித்ததையும் அறிந்தேன். அப்படி உதவியது இஸ்ரேல், அதற்கு ஆதரவு காட்டியது அமெரிக்க அரசு.

ஹிலாரி கூறிய கருத்துகளை மீண்டும் அவருக்கே போட்டுக்காட்டி, இஸ்ரேலிய அரசின் செயலையும் காட்டியிருந்தால் அவர் சிறிதளவாவது ஆத்ம பரிசோதனை செய்துகொண்டிருப்பாரோ என்னவோ? அது குறித்து எனக்கு ஐயம் உண்டு. காரணம் அவர் தனது வாழ்நாளின் பெரும்பகுதியை அமெரிக்க அரசின் மைய நிர்வாகத்தில் முக்கியப் பொறுப்பில் கழித்தவர். எந்த விவகாரத்திலும் எந்த நாளிலும் தங்களுடைய அரசு தவறே செய்யாது என்பதுதான் அவர்களுடைய முதல் வாதமாக இருக்கும்.

நடப்பு மோதலுக்கும் முன்னால், அமெரிக்காவில் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அதிபர்களும் அரசுகளும் சர்வதேச சட்டத்தை இஸ்ரேல் மீற உடந்தையாக இருந்து உதவியவர்கள்தான். மேற்குக் கரையில் யூத குடியிருப்புகளை இஸ்ரேலிய அரசு வளர்த்துக்கொண்டேபோனது குறித்து எப்போதாவது அமெரிக்க அரசு செல்லமாக கடிந்துகொண்டிருக்கிறதே தவிர, கடுமையாக எச்சரித்ததோ நடவடிக்கை எடுத்ததோ கிடையாது.

அமெரிக்காவை ஜனநாயக கட்சி அல்லது குடியரசுக் கட்சி ஆண்டாலும் பாலஸ்தீனர்களுடைய இடங்களை யூதக் குடியிருப்புகளால் ஆக்கிரமித்த இஸ்ரேலிய அரசின் செயலை நிறுத்தும் வல்லமையோ, விருப்பமோ அமெரிக்க அரசுகளுக்கு இருந்ததே இல்லை. இப்படிப் பெருகிய குடியிருப்புகளின் எண்ணிக்கையால், 'இனி பாலஸ்தீன அரசை ஏற்படுத்துவதே முடியாது' என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இதற்காக குற்றஞ்சாட்டுவது என்றால் இஸ்ரேலை மட்டுமல்ல அமெரிக்காவையும் சேர்த்தே குற்றஞ்சாட்ட வேண்டும்.

### அமெரிக்கா மட்டுமல்ல....

சர்வதேச சட்டங்களை மீறும் இஸ்ரேலின் குற்றங்களில் அமெரிக்கா பிரதான உடந்தையாளர். மேலும் சிலரும் உண்டு. அவை பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய இந்திய குடியரசும் இந்தக் குற்றத்தில் பங்கேற்பாளர்தான்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்தி ஓராண்டு வந்துவிட்ட நிலையில், இஸ்ரேல் ராணுவத்தால் அப்பாவி பாலஸ்தீனர்கள் இறப்பது அதிகரித்துக்கொண்டேவருகிறது; ஹிலாரி கிளிண்டன் அல்லது அமெரிக்கா போல அல்லாமல் சுய விமர்சனம், சுய விழிப்புணர்வு உள்ள நாம் இந்தச் செயல் குறித்து நமக்குள் சிந்திக்க வேண்டும். இஸ்ரேல் இப்படிக் கொடுந்தாக்குதல் நடத்த இரு வழிகளில் உதவிய (அந்த இரண்டும் முக்கியத்துவம் வாய்ந்தவை) இந்திய அரசை அதற்குப் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும்.

முதலாவது, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில், 'காஸாவில் தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும், சர்வதேச சட்டங்களை இஸ்ரேல் மதிக்க வேண்டும்' என்ற தீர்மானத்தை இந்திய அரசு ஆதரிக்கவில்லை. இரண்டாவது, இஸ்ரேலின் போர் நடவடிக்கைகள் தொய்வில்லாமல் தொடர இந்தியத் தொழிலாளர்கள் அனுப்பிவைக்கப்படுகின்றனர். இஸ்ரேலில் புதிய வேலைவாய்ப்புகள் இருக்கின்றன, நிறைய சம்பாதிக்கலாம் என்று பாஜக மாநில அரசுகள் தொழிலாளர்களை அனுப்பிவைப்பதாகவும் தகவல்கள் வருகின்றன.

இஸ்ரேலின் செயலைக் கண்டிக்காமல் இந்திய அரசு அதற்கு உதவுவதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, பிரதமர் நரேந்திர மோடிக்கும் இஸ்ரேலியத் தலைவர் பெஞ்சமின் நேதான்யாகுவுக்கும் நிலவும் தனிப்பட்ட நட்பு; அடுத்தது சித்தாந்தம் அடிப்படையிலானது. இஸ்ரேலிய அரசும் தனது (யூத) மத நம்பிக்கையை அரசு நிர்வாகத்துடன் கலந்திருப்பதைப் போல இந்துத்துவ ஆதரவாளர்களும் செயல்பட விரும்புகின்றனர். முஸ்லிம்களை 'அவர்கள்' என்று ஒதுக்கும் சந்தேகம், அல்லது சாத்தானாகப் பார்க்கும் வெறுப்புணர்வுதான் இரண்டாவது காரணம்.

இப்படி இஸ்ரேலிய ஆதரவு நிலையை எடுத்ததன் மூலமும் அதன் வன்முறையான தாக்குதல்களை மன்னிப்பதன் மூலமும், உலக அரங்கில் தனக்குரிய இடத்தையே - முக்கியமில்லை என்று புறந்தள்ளிவிட்டது இந்திய அரசு. மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பாக கடந்த மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் பொது அவையில் விவாதம் நடந்தது. சமாதானம் தொடர்பாக வெற்று வார்த்தைகளையும் முழு நம்பிக்கையற்ற கருத்துகளையும் ஒப்புக்குப் பேசியது இந்தியத் தரப்பு.

### தீர்வை நோக்கி...

ஸ்லோவேனியா பிரதமர் கூறினார்: 'இஸ்ரேலிய அரசுக்கு இதை நான் உரத்தும் தெளிவாகவும் சொல்ல விரும்புகிறேன். ரத்தக்களரியை நிறுத்துங்கள், மக்களுடைய துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள், பிணைக்கைதியாக பிடிக்கப்பட்டவர்களை உங்கள் நாட்டுக்கு அழைத்துவாருங்கள், மேற்குக் கரையில் உள்ள ஆக்கிரமிப்புகளை நிறுத்துங்கள். திருவாளர் நேதன்யாகு அவர்களே இந்தப் போரை இத்துடன் நிறுத்துங்கள்.'

ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் கூறியது: 'போரை நிறுத்த வேண்டும் என்று ஆஸ்திரேலியாவும் 152 நாடுகளும் வாக்களித்து 300 நாள்களாகிவிட்டன. அதே கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துகிறேன். லெபனான் இன்னொரு காஸா ஆகிவிடக் கூடாது'

ஸ்லோவேனியாவும் ஆஸ்திரேலியாவும் வெறும் ஜனநாயக நாடுகள் மட்டுமல்ல, இஸ்ரேலின் முக்கிய புரவலரான அமெரிக்காவுடன் நெருங்கிய நட்புகொண்டவை. நம்முடைய பிரதமருக்கும் வெளியுறவு அமைச்சருக்கும் இல்லாத துணிவு அந்த இருவருக்கும் இருக்கிறது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஜனநாயகம் நிலவும் ஒரே நாடு இஸ்ரேல் என்கிறார்கள். உலகிலேயே அமெரிக்காதான் செல்வ வளத்தில் முதலிடத்தில் இருப்பது, மிக வலிமையுள்ள ஜனநாயக நாடு என்றும் பெயரெடுத்தது. உலகிலேயே பெரிய ஜனநாயக நாடு என்று இந்தியாவுக்குப் பெருமை. காஸாவில் மனித குலத்துக்கு எதிராக இஸ்ரேல் நடத்தும் கொடுமைகளை அடுத்து, இந்தப் புகழ்ச்சியெல்லாம் வெற்று வார்த்தைகளாகிவிட்டன.

பிரதாப் பானு மேத்தா கூறுகிறார்:'இதோ, மூன்று ஜனநாயக நாடுகள் சர்வதேச முறைமை சீர்குலையக் காரணங்களாக இருக்கின்றன. இஸ்ரேல் தனது கொடூரமான தாக்குதல்களாலும், அமெரிக்கா அதற்கு உடந்தையாகவும் ஆதரவாகவும் செயல்படுவதாலும், இந்தியாவும் உடந்தை என்று சொல்லும் அளவுக்கு அந்த நடவடிக்கைக்கு தனது கண்டனங்களைத் தெரிவிக்காமல் தவிர்ப்பதன் மூலமும்.

© த டெலகிராப் இந்தியா



காலைக்கதிர் Kalaikkathir

# நாடுவானில் தொழில்நுட்ப கோளாறு ; கட்டுநாயக்கா திரும்பியது விமானம்

சவூதி அரேபியாவின் ரியாத் நகரை நோக்கிப் பயணித்த விமானம் ஒன்று சுமார் ஒரு மணிநேரத்தின் பின்னர் தொழினுட்ப கோளாறால் மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

இந்த சம்பவம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கன்ஏர்லைன்ஸ்விமானச்சேவைக்குச்சொந்தமான யு.எல் - 265 விமானமே இவ்வாறு தரையிறங்கியுள்ளது.

இதனையடுத்து, இந்த விமானத்தில் பயணித்த பயணிகளில் சிலர் வேறு விமானத்தில் சவுதி அரேபியாவின் ரியாத் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், ஏனையவர்கள் விமான நிலையத்திற்கு அருகிலுள்ள ஹோட்டல் ஒன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என விமான நிலையத்தின் பொறுப்பதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொழினுட்ப கோளாறுக்குள்ளான விமானத்தை பழுதுபார்க்கும் நடவடிக்கைகளைப் பொறியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# தமது பிள்ளைகளின் உளநலம் தொடர்பில் பெற்றோர் விழிப்போடு இருப்பது அவசியம்

## தாமரை கோபுர சம்பவத்தின் பின்னர் உளநல நிபுணர்கள் வேண்டுகோள்

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் உளநலம் குறித்து அவதானமாகயிருக்கவேண்டும் என உளநல நிபுணர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொழும்பு தாமரை கோபுரத்திலிருந்து பாடசாலை மாணவியொருவர் குதித்து உயிர்மாய்த்த சம்பவத்தின் பின்னரே உளநல நிபுணர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

கட்டிளம்பருவத்தைசேர்ந்தபலர்தங்கள்போராட்டங்களை வெளியில் சொல்லாமல் துயருகின்றனர் என தெரிவித்துள்ள மனநல மருத்துவர் சமன்வீரவர்தன, மன அழுத்தத்திற்கான அறிகுறிகளை ஆரம்பகட்டத்திலேயே அடையாளம் காண்பது அவசியம் எனத் தெரிவித்துள்ளார்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் நடத்தைகளில் ஏற்படும் மாற்றம் குறித்து அறிந்திருப்பது மிகவும் அவசியம் எனத் தெரிவித்துள்ள அவர் தங்கள் பிள்ளைகள் திடீரென நண்பர்கள் குடும்பத்தவர்களிடமிருந்து விலகிச்செல்வது அவர்கள் மனோநிலையில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள் குறித்து அவதானமாகயிருக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் இரண்டு வாரங்க ளிற்கு மேல் சோகமாகயிருந்தால் அல்லது சீற்றத்துடன் காணப்பட்டால் அது குறித்து அவதானிக்க வேண்டும், பொழுதுபோக்குகள், அல்லது பழகுவதில் ஆர்வமின்மை உறங்கும்முறையில் மாற்றங்கள், பசியின்மை பாடசாலை செயற்பாடுகளில் மாற்றங்கள் போன்றவை குறித்தும் எச்சரிக்கையாகயிருக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளிடத்தில் நம்பிக்கையின்மை வாழ்க்கையிலிருந்து தப்பிச்செல்ல முயலுதல் போன்ற உணர்வுகள் காணப்பட்டால் அது குறித்தும் பெற்றோர் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும்என எமனநலமருத்துவர்சமன்வீரவர்தன தெரிவித்துள்ளார்.

பிள்ளைகளுடன் பெற்றோர் வெளிப்படையான தொடர்பாடல்களை பேணுவது அவசியம் எனத் தெரிவித்துள்ள அவர், பிள்ளைகள் தங்கள் உணர்வுகளை பகிர்ந்துகொள்ளக்கூடிய சூழலை பெற்றோர்கள் உருவாக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். (05)

# ஐ.நா. தீர்மானத்தை அநுர ஆட்சியும் எதிர்த்த தீர்மானம் பெரும் ஏமாற்றம்

## சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்

இலங்கையின்புதியஅரசாங்கம்கடந்தகாலகொள்கைகளை தொடர்வதற்கும்ஆதாரங்களைசேகரிக்கும்பொறிமுஷ்றையை எதிர்ப்பதற்கும் தீர்மானித்தமை ஏமாற்றமளிக்கின்றது என சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான பிரதி பிராந்திய இயக்குநர் பாபு ராம் பண்ட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கை தொடர்பானதீர்மானத்தைநிறைவேற்றியுள்ளமைஇலங்கையில் காணப்படும் மனித உரிமைகள் கரிசனை குறித்து சர்வதேச சமூகம் தொடர்ந்தும் கவனம் செலுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் விதத்தில் அமைந்துள்ளது.

புதிய தீர்மானத்தின் மூலம் ஆணை நீடிக்கப்பட்டமை பொறுப்புக்கூறலிற்கு ஆதரவளிப்பதை நோக்கிய வரவேற்கத்தக்க விடயம், எனினும் இந்த தீர்மானம் மேலும் ஒரு வருடகாலத்திற்கு மாத்திரம் நீடிக்கப்பட்டுள்ளமை ஏமாற்றமளிக்கின்றது.

சிவில் சமூகத்தினரும் சர்வதேச அமைப்புகளும் ஆணையை இரண்டு வருடங்களிற்கு நீடிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

சமீபத்தில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்ற அடுத்த மாதம் பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ள நாடு என்ற வகையில, அரசியல் மாற்றத்தை எதிர்கொண்டுள்ள நாடு என்ற வகையில் இலங்கை கடந்த காலங்களில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடன் சிறந்த ஈடுபாட்டை பேணுவது அவசியம்.

இதன் காரணமாக இலங்கையின் புதிய அரசாங்கம் கடந்த கால கொள்கைகளைத் தொடர்வதற்கும் ஆதாரங்களை சேகரிக்கும்பொறிமுஷ்றையைஎதிர்ப்பதற்கும்தீர்மானித்தமை ஏமாற்றமளிக்கின்றது.

பாரதூரமான மனித உரிமை மீறல்களிற்கு பொறுப்புகூறுவதற்கு கிடைத்துள்ள வளங்களை பயன்படுத்து அரசாங்கம் தயாராகவுள்ளதா என்ற சந்தேகத்தை இது எழுப்பியுள்ளது.




ஆழமா வேரூன்றியுள்ள தண்டனையின்மை தொடரும் ஆபத்தும் உள்ளது.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் சர்வதேச சமூகம் நீதி உண்மை இழப்பீட்டுவிவகாரங்களில்அர்த்தபூர்வமான முன்னேற்றத்தை அடைவதற்காக சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்தும் ஈடுபாட்டை பேணவேண்டும்.

அதேவேளைஇலங்கைஐக்கியநாடுகளின் பொறுப்புக்கூறும் திட்டம் உட்பட ஐ.நாவின் மனித உரிமை பொறிமுறைகளுடன் முழுமையான ஒத்துழைப்பை பேணவேண்டும். இலங்கையின் மூன்று தசாப்த யுத்தத்தின்போது இழைக்கப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்கள், சர்வதேச சட்டத்தின் கீழான ஏனைய சட்ட மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் பல வருடங்களாக நீதிக்காக பொறுப்புக்கூறலிற்காக காத்திருக்கின்ற நிலையில் இலங்கை அரசாங்கம் இது குறித்த அர்ப்பணிப்பை வெளிப்படுத்தவேண்டும். - என்றார்.

(05)

# கண்டியில் ஆணின் சடலம் மீட்பு

கண்டி, அஸ்கிரிய பிரதேசத்தில் உள்ள கைவிடப்பட்ட வீடொன்றின் பின்புறத்திலிருந்து ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகக் கண்டி தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்த தகவல்களும் கிடைக்கவில்லை எனவும் இவர் ஒரு வாரத்திற்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் சம்பவ இடத்திலேயே வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சடலத்தைப் பார்வையிடுவதற்குச் சட்ட வைத்திய அதிகாரியை சம்பவ இடத்திற்கு அழைத்துச் செல்ல பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கண்டி தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2 வேட்புமனுக்கள் நிராகரிப்பு

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 46 வேட்புமனுக்கள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களால் கையளிக்கபட்ட நிலையில் இரண்டு சுயேச்சை குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

வேட்புமனு தாக்கலுக்கான காலக்கெடு வெள்ளிக்கிழமை நண்பகல் நிறைவடைந்த நிலையில் வேட்புமனுக்கள் தொடர்பாக ஆட்சேபனைகளை முன்வைக்க அவகாசம் வழங்கப்பட்டது.

இந்நிலையில், இரண்டு சுயேச்சை குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இம்முறை நாடாளுமன்ற தேர்தலில் 44 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் களமிறங்கவுள்ளன.(05)

# ஆற்றில் நுரை படர்ந்த தண்ணீர் நுவரெலியா மக்கள் அதிர்ச்சி



நுவரெலியா மீபிலிமான பகுதியில் இருந்து நானுஓயா வழியாக செல்லும் ஆற்றில் தொடர் மழை காரணமாக ருவான் எலியா, பிளாக்பூல் போன்ற பகுதிகளில் ஆற்றில் தேங்கியுள்ள நீரிலும் கரையோரங்களிலும் அத்துடன் ஆற்றில் இருந்து வெளியேறும் நீர் அதிக இரசாயன நுரைகளுடன் செல்கிறது.

குறித்த இரசாயன நுரைகளுடன் அதிக துர்நாற்றம் வீசுவதால் இப்பகுதி விவசாயிகளும் பொது மக்களும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

நுவரெலியாவில் தொடர்ந்து பெய்யும் மழையுடன் காற்று பலமாக வீசியதால் ஆற்றுத்தண்ணீர் மீது படர்ந்திருந்த நுரை ஆங்காங்கே படர்ந்து செல்கிறது.

இதனால் குறித்த ஆற்று நீர் மாசுபட்டு அதிக நுரையுடன் வெளியேறுவதாக நினைத்து சுவாச பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்பு இருப்பதாக மக்கள் அச்சமடைந்துள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# முதல் பெண் மாவீரர் மாலதியின் 37 ஆம் ஆண்டு நினைவேந்தல்





தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் வீரமரணமடைந்த முதல் பெண் போராளி மாலதியின் 37 ஆவது நினைவேந்தல் நிகழ்வு வியாழக்கிழமை மாலை மன்னார் ஆள்காட்டி வெளியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

குடும்ப உறவுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் போராளிகள்,உறவினர்கள்,உள்ளடங்களாக பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது அவரது உருவப்படத்திற்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு,மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

(05)

# பதுளையில் வடிவேல் சுரேஷ் வேட்பு மனு தாக்கல் செய்தார்



ஐக்கிய ஜனநாயக குரல் சார்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் வெள்ளிக்கிழமை காலை பதுளை மாவட்ட செயலகத்தில் தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

வியாழக்கிழமை கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில்ரஞ்சன்ராமநாயக்கதலைமையில் புதிய கட்சியாக ஐக்கிய ஜனநாயக குரல் என்ற கட்சி அங்குராட்பணம் செய்து வைக்கப்பட்டது.

இக் கட்சியின் ஒலிவாங்கி சின்னம் தேர்தல்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட நிலையில் வெள்ளிக்கிழமை காலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் வேட்பு மனுவைத் தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டிருந்தார்.(05)

# மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபச்சார விடுதி : 5 பெண்கள் கைது

கல்கிசை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இரத்மலானை பிரதேசத்தில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபச்சார விடுதி ஒன்றிலிருந்து ஐந்து பெண்கள் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கல்கிசை பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிசை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்களில் மசாஜ் நிலையத்தின் உரிமையாளரும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிலியந்தலை, வென்னப்புவை, பனாதர, இரத்மலானை மற்றும் மடபாத்த ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 21, 22, 24, 39 மற்றும் 41 வயதுடைய ஐந்து பெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

## நம்ப ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் போட்டியிடதன்னை முன்னிறுத்திய நபரே தமக்கு எதிராக செயற்பட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஹேஷா விதான சகோதரர் என்னிடம் சகோதரி தமிதா, நீங்கள் ஏன் இரத்தினபுரியில் போட்டியிடக்கூடாது என்று கேட்டார். நான் எங்கு கேட்பது என்று யோசிக்கவில்லை என்றேன். நான் உங்களை இங்கு வேட்பாளராக்குகின்றேன், இங்கு பெண்களின் பிரதிநிதித்துவம் இல்லை என்றார்.

நீங்கள் முன்மொழிந்தால் நான் வருகிறேன் என்றேன். அப்படித்தான் எனது பெயர் வந்தது. அதனை இல்லை என்று கூறினால் என்னிடம் ஆதாரம் உள்ளது.

நேற்று எனது பெயர் விடுபட்டதாக செய்தி கிடைத்தது. என் பெயர் மாற்றப்பட்டுள்ளது என்று. நான் ஆதாரத்துடன் பேசுகிறேன். இந்த ஆதாரங்கள் அனைத்தையும் ஊடகங்கள் முன் காட்டத் தயாராக உள்ளேன்.

எனக்கு பரிந்துரைத்த அதே நபர் என் காலைவாரினார். நான் நீதிமன்றம் செல்வேன். எனது அடிப்படை உரிமைகள் தெளிவாக மீறப்பட்டுள்ளன என்றார்.

## அதிகளவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குறுதிகளை வழங்கியதில்லை. சகலருடனும் ஒன்றிணைந்து செயற்பட நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் ஊழல்வாதிகளுடன் எங்களுக்கு எந்தக் கொடுக்கல் வாங்கலும் இல்லை. நாட்டு மக்களை ஏமாற்றியவர்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை. நாட்டை கட்டியெழுப்ப நேர்மையாக செயற்படுபவர்களுடன் இணைந்து பணியாற்றுவோம்.

113 இற்கும் அதிகமான ஆசனங்களை இம்முறை எங்களால் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அதிக எண்ணிக்கையிலான பெண்கள் பிரதிநிதித்துவத்தை பெற்று இம்முறை பாராளுமன்றத்தில் சாதனை படைப்போம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்களில் எந்தத் தடங்களும் ஏற்படாது. எங்களின் நிலைப்பாடுகளையும் வெளிப்படுத்தி வெற்றிகரமாக இந்தப் பேச்சுக்களை நிறைவு செய்வோம் என்றார்.

## நச்சுப் பொருள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கவுள்ளதாக செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## கடந்தகாலத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளையோ, போர் குற்ற விசாரணைகளையோ அல்லது இனப்படுகொலை விசாரணைகளையோ நாங்கள் முன்னெடுக்க மாட்டோம் என கூறியுள்ளார்.

இது ஆச்சரியமான ஒரு விடயம் அல்ல. இதனை ஜே.வி.பிக்கும், தேசிய மக்கள் சக்திக்கும் பின்னால் செல்லுகின்ற தமிழர்கள் ஒரு கணம் சிந்திக்க வேண்டும். ஜே.வி.பியினுடைய கடந்தகால செயற்பாடுகளை எமது மக்கள் மிகத் தெளிவாக உணரவேண்டும். இல்லாவிட்டால் பானையில் இருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாக தமிழர்களுடைய எதிர்காலம் சூனியம் ஆகிவிடும்.

சந்திரிகாவின் ஆட்சியிலே சந்திரிகாவினுடைய பங்காளிகளாக இருந்து தமிழர்களை அழித்தொழிப்பதற்கு துணை நின்ற கட்சிதான் ஜே.வி.பி. போரின் இறுதிக் கட்டத்திலே முள்ளிவாய்க்காலில் நிலப்பரப்பு குறைந்த சிறிய பகுதிக்குள் 4 இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் சுருங்கியிருந்தவேளை, கனரக ஆயுதங்களை பாவித்து தாக்குதல் நடத்த வேண்டாம் என்று உலக நாடுகள் மகிந்தவின் அரசுக்கு அழுத்தத்தை வழங்கின. இந்த சந்தர்ப்பத்தில் அந்தக் குறுகிய நிலப்பரப்புக்குள் கனரக ஆயுதங்களை பயன்படுத்தி தாக்குதல் நடத்த வேண்டும் என்று மகிந்தவுக்கு அழுத்தம் கொடுத்து, ஆயிரக்கணக்கானவர்களை திரட்டி கொழும்பில் போராட்டம் செய்தது இந்த ஜே.வி.பி.

இந்த ஜே.வி.பியின் அழுத்தத்தினால் தமிழர்களை தாக்கி அழித்தொழித்து இனப்படுகொலையை முன்னெடுத்தமை வரலாறு. அதைவிட, தமிழர்களுடைய தாயகம் எனப்படுகின்ற இணைந்த வடக்கு கிழக்கினை பிரிப்பதற்கு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து பிரித்த ஒரு கட்சிதான் ஜே.வி.பி.

தமிழர்கள் தமது இனப் பிரச்சினைக்கு தீர்வாக ஒற்றை ஆட்சியையோ அல்லது மாகாண சபை முறைகளையோ ஏற்றுக் கொள்ளவில்லை, அவற்றினை நிராகரித்துள்ளார்கள். ஆனால் ஜே.வி.பியானது தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட மாகாண சபை முறைகூட இலங்கையில் இருக்கக் கூடாது என சொல்கின்றது. ஏனென்றால் அதிலும் கொஞ்ச அதிகாரங்கள் இருக்கின்றனவாம்.

ஒற்றையாட்சி என்ற பெயரில் யாப்பு இருக்கக் கூடாதாம். ஏனென்றால் ஒற்றையாட்சி என்ற பெயரில் இருந்தால் பிரித்தானியாவில் இருப்பதுபோல ஒற்றை ஆட்சிக்குள் தமிழர்களுக்கு அதிகாரங்கள் கொடுப்பட்டுவிடக்கூடிய அபாயம் இருப்பதாக ஜே.வி.பி. கூறுகின்றது.

ஆகையால் கடந்த காலத்தில் இருந்த ஆட்சியாளர்களைவிட ஜே.வி.பி. எவ்வளவு பயங்கரமானவர்கள் என சிந்தித்துப் பார்க்க வேண்டும். உண்மையைச் சொல்லப்போனால் ஜே.வி.பி, என்.பி.பி அரசாங்கத்திற்கும் கடந்த காலத்தில் இருந்த ஆட்சியாளர்களுக்கும் இடையில் எந்த ஒரு வேறுபாடும் கிடையாது. அவர்கள் கொழுக்கட்டை என்றால் இவர்கள் மோதகம். ஆகையால் எமது மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றார்.

## கன மழை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென், வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளிலும் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, தென், வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் மணித்தியாலத்திற்கு 40 முதல் 50 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, நேற்று காலை 8.30 முதல் அதிகாலை 2.30 வரையான காலப்பகுதியில் ஹங்வெல்ல பகுதியிலேயே அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அங்கு 196.5 மில்லிமீற்றர் வரை மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

குறித்த காலப்பகுதியில் திவுலபிட்டியவில் 173.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் களுத்துறை வோகன் தோட்டத்தில் 163.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பலத்த மழை காரணமாகப் பல பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தின் பத்தேகம, நெலுவ, நாகொட மற்றும் எல்பிட்டிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் களுத்துறை மாவட்டத்தின் மத்துகம, தொடங்கொட, வல்லவிட்ட, ஹொரண, புளத்சிங்கள மற்றும் இங்கிரிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் இரண்டாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தின் ருவன்வெல்ல பிரதேச செயலக பிரிவிற்கும் இரண்டாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதனைத்தவிர, பதுளை, கொழும்பு, காலி, கம்பஹா, கேகாலை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் பல பிரதேச செயலக பிரிவுகளுக்கு முதலாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மீனவர்களுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிலோமீற்றர் வரை பலத்த காற்று வீசக்கூடும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் குறித்த கடற்பிராந்தியங்கள் இடைக்கிடையே கொந்தளிப்பாக இருக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து காலி மற்றும் மாத்தறை ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் கடல் அலை 2.5-3 மீற்றர் வரை உயரும் சாத்தியமுள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

## பெரும்பான்மையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் பொதுத் தேர்தல், மாகாணசபைத் தேர்தலிலும் வெற்றி பெற முடியும் என்ற நிலைப்பாடு பெரும்பாலானோர் மத்தியில் காணப்படுகிறது. இது முற்றிலும் தவறான நிலைப்பாடாகும். நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றும் கட்சியே ஆட்சியமைக்கும். வரவு - செலவு திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை காணப்படவேண்டும்.

அவ்வாறான ஆட்சியை ஐக்கிய மக்கள் கூட்டணியால் உருவாக்க முடியும் என்று நம்புகின்றோம். ஜனநாயக நாடுகளில் ஜனாதிபதி ஒரு கட்சியிலிருந்தும், பிரதமர் பிரிதொரு கட்சியிலிருந்தும் தெரிவு செய்யப்படுவது புதிய விடயமல்ல. அமெரிக்காவில் அடிக்கடி இவ்வாறு இடம்பெற்றுள்ளது. சில கட்சிகள் கட்சிக்கு வாக்களிக்குமாறு கூறுகின்றன. விருப்பத்தெரிவு குறித்து பேசுவதில்லை.

நாம் பிரதிநிதித்துவ அரசியலையே முன்னெடுக்கின்றோம். அது சர்வாதிகாரமல்ல. இது சீனா அல்ல. தமக்காக களமிறங்கும் வேட்பாளர்கள் யார் என்பதை அறிந்து மக்கள் தீர்மானிக்க வேண்டும். கட்சிக்கு வாக்களித்தால், ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஒருவரை நீக்கிவிட்டு பிரிதொருவரை நியமிக்கக்கூடிய வாய்ப்புக்கள் கூட காணப்படுகின்றன.

எனவே எந்த கட்சியிலிருந்து எந்த பிரதிநிதித்துவத் தெரிவு செய்வது என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். சரியானவற்றைக் கூறும், அவற்றை செய்து காண்பிப்பவர்களையே மக்கள் தெரிவு செய்யவேண்டும். ஆட்சியாளர்களின் சரியான தீர்மானங்களுக்கு நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் என்றார்.

## நாடாளுமன்ற ....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட செயலாளரும், புத்தளம் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான எச்.எம்.எஸ்.பி. ஹேரத் தெரிவித்தார்.

மேலும், புத்தளம் மாவட்டத்தில் 24 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும், 15 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. 26 அரசியல் கட்சிகளும், 18 சுயேட்சைக் குழுக்களும் அடங்களாக மொத்தம் 44 அரசியல் தரப்புகள் வேட்புமனுக்கள் தாக்கல் செய்திருந்தன. இதன்போது, 2 அரசியல் கட்சிகள் மற்றும் 3 சுயேச்சை குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்

## ஓய்வூதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்தார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நிதியமைச்சின் உயர் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நடத்திய கலந்துரையாடலின் போதே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் மாதாந்த இடைக்கால கொடுப்பனவாக 3000 ரூபாய் வழங்குவதற்கு ஓகஸ்ட் 24 திகதியிட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2024 வெளியிடப்பட்டது. எனினும் அதற்கான நிதி எதுவும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, இதற்கான நிதியை வழங்குமாறு நிதியமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

2024 ஒக்டோபர் மாத ஓய்வூதியத்துடன் இடைக்கால கொடுப்பனவான ரூ.3000 கிடைக்காததால் ஓய்வூதியம் பெறுவோர் எதிர்கொள்ளும் சிரமங்களையும், அவர்களின் கோரிக்கையையும் கருத்தில் கொண்டு, அரசின் நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் இம்மாதம் முதல் இந்த தொகையை வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஒக்டோபர் மாதத்துக்கான ஓய்வூதியம் ஏற்கனவே ஓய்வூதியர்களின் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதால், ஒக்டோபர் மாதத்துக்கான ரூ.3000 இடைக்கால கொடுப்பனவை அடுத்த வாரத்திற்குள் அவர்களது கணக்கில் வைப்பிலிடுமாறும், 3000 ரூபாய் கொடுப்பனவை அடுத்த மாதம் முதல் ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்குமாறும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## விசாரணை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும், புலமைப்பரிசில் பரீட்சையைமீண்டும்நடத்துவதில்லையென்ற, நிபுணர் குழுவின் தீர்மானத்தில் மாற்றம் ஏற்படாதென, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர முன்னதாக நம்பிக்கை தெரிவித்தார். எனினும், இக்குழுவின் பரிந்துரைகளை ஆராய்வதற்காக மற்றுமொரு சுயாதீன குழுவைப் பிரதமர் அண்மையில் நியமித்திருந்தார்.

இக்குழுவின் அறிக்கையே பிரதமரிடம் தற்சமயம் கையளிக்கப்பட்டுள்ளது. புலமைப்பரிசில் பரீட்சையின் மதிப்பீட்டை மேற்கொள்வதா, இல்லையா என்பது தொடர்பில் இதுவரை தமக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படவில்லை என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

அதேநேரம், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பெற்றோர்கள் செய்த முறைப்பாடுகளின் பிரகாரம், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகள் முடியும் வரை, புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கக் கூடாது எனக் கல்வி அமைச்சு மற்றும் பரீட்சை திணைக்களத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# ஜனாதிபதியின் புகைப்படங்களை வெளியிட அனுமதி பெறவேண்டும்




பல்வேறுநிகழ்வுகளுக்காக பெயர்ப் பலகைகள் மற்றும் விசேட நினைவு சஞ்சிகைகளுக்கு ஜனாதிபதியின் புகைப்படங்கள் மற்றும்வாழ்த்துசெய்திகளை வெளியிடுவதற்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தின் எழுத்துமூல அனுமதியை அனைத்து அரச நிறுவனங்களுக்கும் பெறுமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

அரச நிதியைப் பெற்று மேற்கொள்ளப்படும் பணிகளை ஏற்பாடு செய்யும் போது அரசாங்கத்தின் கொள்கை மற்றும் தொலைநோக்குப் பார்வைக்கு அமைவாக செயற்படுவது அவசியமானது எனவும் ஜனாதிபதியின் செயலாளர் அரச நிறுவனங்களுக்கு மேலும் அறிவித்துள்ளார்.

அனைத்து அமைச்சின் செயலாளர்கள், அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபன சபைகள் உள்ளிட்ட சட்டபூர்வ நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும்அரசிற்குசொந்தமானநிறுவனங்களின் தலைவர்களுக்குஜனாதிபதியின்செயலாளர் எழுத்து மூலம் இந்த அறிவித்தலை வழங்கியுள்ளார்.(05)

# காணி பிணக்கு காரணமாக ஓமந்தையில் வாள்வெட்டு

## ஒருவர் மரணம்; ஒருவர் படுகாயம்

ஓமந்தை, கதிரவேலுபூவரசன்குளம்பகுதியில்காணி பிணக்கு காரணமாக இடம்பெற்றவாள்வெட்டில் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா, ஓமந்தை, கதிரவேலுபூவரசன்குளம் பகுதியில் வசிக்கும் இரு குடும்பங்களுக்கிடையில் காணி தொடர்பாகச் சிறிய பிணக்கு ஒன்று இருந்து வந்துள்ளது. இந்நிலையில் குறித்த காணியில் மாமன் மற்றும் மருகன் ஆகிய இருவரும் வேலை செய்து கொண்டிருந்த போது அங்கு வந்த நபர்கள் குறித்த இருவர் மீதும் மிளகாய்த் தூளை அள்ளி வீசிவிட்டு அவர்களை விரட்டி வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டனர் என ஊர்மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்போது இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளங்கோ (வயது 38) என்பவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளதுடன், 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின்தந்தையான ரூ.திலீபன்படுகாயமடைந்த நிலையில் உறவினர்கள் மற்றும் ஊர் மக்களால் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்தவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். இறந்தவரின் உடல் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# முன்னாள் பிரதி அமைச்சர் ஏக்கநாயக்க காலமானார்



அநுராதபுரம்மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான டபிள்யூ.பி. ஏக்கநாயக்க தனது 76 ஆவது வயதில் காலமானார்.

வியாழக்கிழமைஏக்கநாயக்க அவரது வீட்டின்குளியலறையில் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முதற்கட்ட விசாரணையில், அவர் வீட்டில் தனியாக வசித்து வந்தார் எனவும், மாரடைப்பு ஏற்பட்டுஉயிரிழந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.(05)



# ஊடகவியலாளர் தரிந்துவை கைது செய்தால் எதிர்ப்போம்

## சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

புலனாய்வு ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவை கைது செய்வதற்கான நகர்வுகள் குறித்து அதன் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தும் சுதந்திர ஊடக இயக்கம், அவரைக் கைது செய்வதற்கான எந்தவொரு முயற்சியும் பலமான எதிர்ப்பையும் பொருத்தமான நடவடிக்கையையும் சந்திக்கும் என்று எச்சரிக்கிறது.

ஜயவர்தனவால் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் அவரை எதிர்காலத்தில் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனையிட்டு சுதந்திர ஊடக இயக்கம் கவனம் செலுத்தியுள்ளது.

ஜயவர்தனவின் நடவடிக்கைகள் தற்போதைய விசாரணைகளுக்கு இடையூறாக இருக்கின்றன எனவும், அவருக்கு எதிராக பொருத்தமான உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (சிஐடி) மனிதப் படுகொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி இந்துக சில்வா கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததன் பின்னணியிலேயே இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தரிந்து ஜயவர்தன ஒரு புலனாய்வு ஊடகவியலாளர் ஆவார். அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்தை ஈர்த்த 2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விசாரணைகள் உட்பட பல்வேறு சம்பவங்கள் குறித்து விரிவாக அறிக்கையிட்டுள்ளார்.

நீதிமன்றில் நடந்துகொண்ட விதம் காரணமாக குற்றப் புலனாய்வுப் பிரிவிலிருந்து முன்னர் நீக்கப்பட்ட இன்ஸ்பெக்டர் இந்துக சில்வா பின்னர் 2019இல் கோட்டாபய ராஜபக்ஷ நிர்வாகத்தால் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டார். இவரின் நடவடிக்கைகள் குறித்து சுதந்திர ஊடக இயக்கம் அதன் கவலையை வெளியிட்டுள்ளது.

இன்ஸ்பெக்டர் சில்வா, அப்போதைய சிஐடி பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு எதிரான சதிச் செயலில் ஈடுபட்ட அதிகாரியாக ஜெயவர்தனவின் அறிக்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைச் சூழ்ந்துள்ள மர்மங்களை மற்றும் மறைக்கப்பட்ட ஆபத்தான உண்மைகளை வெளிக்கொணரவும் அம்பலப்படுத்தவும் பணியாற்றும் ஓர் ஊடகவியலாளரை பொலிஸார் இலக்கு வைப்பது கவலையளிப்பதாக சுதந்திர ஊடக இயக்கம் குறிப்பிடுகிறது. அதே நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி தொடர்ந்து தாமதிக்கப்படுவதோடு வெறும் அரசியல் வாக்குறுதியாக குறைக்கப்பட்டதாகவும் தோற்றமளிக்கிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவது தற்போது பொலிஸார் எதிர்கொள்ளும் மிக முக்கியமான சவாலாகும் என்பதை மீண்டும் வலியுறுத்தும் அதேவேளை புலன் விசாரணைகள் தடம் புரளாமல் இருப்பதை உறுதி செய்யுமாறும், தனது பணியை சிறப்பாகச் செய்ததற்காக ஊடகவியலாளர்களுக்கு எதிராக குறுகிய நோக்குடன் பழிவாங்கும் நடவடிக்கைகளை தவிர்க்குமாறும் குற்ற விசாரணை பிரிவு மற்றும் பொலிஸ் துறையினரை சுதந்திர ஊடக இயக்கம் கேட்டுக்கொள்கிறது.

தரிந்து ஜயவர்தன கைது செய்யப்பட்டால், அவரது உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம் என்றும் சுதந்திர ஊடக இயக்கம் எச்சரிக்கிறது.

(05)

# சட்டவிரோதமாக கொண்டுவந்த சிகரட்டுகளுடன் ஒருவர் கைது

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சிகரட்டுகளுடன் சந்தேக நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று அதிகாலை டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதியிலிருந்து 14,800 சிகரெட்டுகள் அடங்கிய 74 சிகரட்டு காட்டுன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# முதியவர் கழுத்து நெரித்துக் கொலை : 3 ஆண்டுகளின் பின் சந்தேகநபர் கைது

*70 வயது முதியவர் ஒருவரை கழுத்து நெரித்து கொலை செய்துவிட்டுத் தலைமறைவாக இருந்த சந்தேக நபரொருவர் மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார் என குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.*

*இது தொடர்பில் தெரியவருவதாவது -*

*கலபிட்டமட பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுடைய முதியவர் ஒருவர் கடந்த 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளார்.*

*இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், முதியவரின் அயல் வீட்டில் வசிக்கும் நபரொருவரால் இந்த கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.*

*இதனையடுத்து , சந்தேக நபரான அயல் வீட்டில் வசிக்கும் நபர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்று, 2022 ஆம் ஆண்டு மீண்டும் நாடு திரும்பியுள்ள நிலையில் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தலைமறைவாக இருந்துள்ளார்.*

*பின்னர், இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.10.2024இல் வெளியிடப்பெற்றது